இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 37 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 30 – ஞாயிற்றுக்கிழமை 15 செப்டம்பர் 2024 – வெளியீர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 37: Thiruvalluvar Year - 2055 - Aavani 30 - Sunday 15 September 2024 - Dak 16 Pages ₹ 5.00


## இன்று செப்:15,-

# தென்னாட்டு காந்தி, திராவிட புத்தர் அண்ணா பிறந்த நாள்!



**அறிஞர், அறிஞர்களுக் கெல்லாம் அறிஞர், அறிஞரேறு, பேரறிஞர் அண்ணா அவர்களின் 116–ஆவது பிறந்த நாள் இன்று !**

ஆயிரங் காலத்துப் பயிராம் “ தி.மு.க.” என்னும் மாபெரும் மக்கள் எழுச்சி இயக்கத்தின் மூலவர்; சேலம் நீதிக் கட்சி மாநாட்டில், தனது தீர்மானத்தின் மூலம், “திராவிடர் கழகம்” முகிழ்த்தெழ விதை நட்ட வித்தகர்; தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதன் மூலம், தாய்க்குப் பெயர் தந்த தலைமகன் ஆனவர் அண்ணா !

அண்ணா, அறுபது ஆண்டுகளுக்கும் குறைவாகவே வாழ்ந்தார் எனினும், ஆயிரம் ஆண்டுகளுக்கு திராவிட சமுதாயத்திற்குத் தேவையானவற்றை எழுதியும், பேசியும் வைத்துச் சென்றிருக்கிறார்.

**பேராசிரியர் வியந்த அண்ணா!**

“பேரறிஞர் அண்ணா ‘.... ஒரு தலைவரின் பெயரா? இல்லை, இல்லை. மக்களைக் கட்டிப்போட்ட தமிழ் மந்திரப் பெயர். அவர் யார்? ஓரியக்கத்தின் முன்னோடி, தலைவர்; தன்னைச் சூழ்ந்த தம்பியராம் பெரும் படையுடையார்; தன்னை எதிர்த்தோரையும் வாதத்தால் வீழ்த்தவல்ல நாவன்மையாளர்; எளிய மக்களையும், கற்று வல்லாரையும் கவர்ந்திழுக்கும் சொல்வலை வேட்டுவர்; மக்கள் நலனன்றித் தன் நலனைக் கருதாத தகைமையாளர்; தன் தம்பியரையும் தனக்கு மேலாக உயர்த்திப் பாராட்டிப் பெருமைப்படுத்திய தங்கமனத்தாளர்; தன் துயரைப் பெரிதெனக் கருதாத தகைசால் பெருந்தகை; உயரிய கருத்துகளைக் கதைகளாகப் புனைந்தும் நாடகங்களாக வரைந்தும், நாடக மாந்தராக நடித்தும் மக்கள் மனதில் பதிய வைத்த இலக்கியப் படைப்பாளர்; ஆசிரியர், நாடக நடிகர், தலைவர் எனப் பன்முக ஆற்றல்களின் குவிமையமாகத் திகழ்ந்த திராவிடகுல ஒளிவிளக்கு அண்ணா!”.

**கலைஞரின் கவிதையில் வாழும் அண்ணா!**

“தலைவரென்பார், தத்துவ மேதை என்பார், நடிகரென்பார், நாடக வேந்தரென்பார், சொல் லாற்றல், சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார், மனித ரென்பார்; மாணிக்கமென்பார்; மாநிலத்து அமைச்சரென்பார்; அன்னையென்பார்; அருள்மொழிக் காவல் என்பார்; அரசியல்வாதி என்பார் - அத்தனையும் சொல்வதற்கு நேரமற்றோர், நெஞ்சத்து அன்பாலே அண்ணா என்ற ஒரு சொல்லால் அழைக் கட்டும் என்றே - அவர் அன்னை பெயரும் தந்தார் !”

**பெரியார் போற்றிய அண்ணா!**

“ இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர் - தெரிந்த தலைவர் - பார்த்த தலைவர், பெரியார் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது; செய்யவும் மனம் வந்ததில்லை; வராது. பெரியார், நம் இதயப் பூர்வமான தலைவர், இதயத் திலே குடியேறிய தலைவர்” என்று அண்ணா அவர்களால் விதந்தோதப்பட்ட தந்தை பெரியார் அவர்களே அண்ணா அவர்களை “புத்தர்” என்றார்! ஆம், அண்ணா, திராவிட புத்தர் !

“ அண்ணா அவர்களை நான் புத்தர் என்றே சொல்வேன். அவர் பொறுமையிலே புத்தர் ; பிறருடைய கடுஞ்சொல்லையெல்லாம் தாங்கிக் கொள்வதனாலே புத்தர்; தனக்கு வந்த இழிவைப் பற்றியெல்லாம் கவலைப்படாத தன்மையிலே புத்தர்; இரக்க உணர்வு மிகுந்த, தியாகத் திருவுருவமாக இருந்த அண்ணா, புத்தராக இருந்தார்! அண்ணா புத்தராக மட்டுமல்ல, புத்தரை விட மேலானவராக இருந்தார்” என்றார் பெரியார். இதைவிட அண்ணா அவர்களைப் பற்றிச் சொல்ல வேறு என்ன இருக்கிறது?

அண்ணா அவர்களைப் பற்றி எப்படிச் சொன்னாலும் - சொல்லுக்குள் சொற்புதையல் தேடிப் புகழ்ந்துரைத்தாலும், பொருளுக்குள் பொருள்கூட்டிப் போற்றினாலும் - அண்ணாவின் உயர்ந்த உள்ளடக்கத்தையும், ஆழ்ந்த அறிவாற்றலையும், உன்னதமான ஆளுமையையும் முழுமையாக விளக்கியது ஆகாது.

**நாம் பெற்றதே பெரும் பேறு!**

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் - என்று தம்பிமார் பேரணி கண்டு பெருமிதம் கொண்டவர் அண்ணா! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - என்று வழிவகுத்துக் கொடுத்தவர் அண்ணா ! நமது தலைவர்களுக்கெல்லாம் தலைவராக அண்ணா அவர்களை, திராவிடர்களாகிய நாம் பெற்றதே பெரும்பேறு !

**அண்ணா வழியில் அயராது உழைத்திடவும், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திடவும் இன்றைய இளைஞர்கள், அண்ணா தோற்றுவித்த இந்த இயக்கத்தில் இணையும் ஒவ்வொரு நாளும், அண்ணா பிறந்த நாளே !**

## சென்னை திரும்பினார் முதல்வர்!

# அமெரிக்கப் பயணம் வெற்றிப் பயணம் - சாதனைப் பயணம்!

## விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, செப்.15–**

**“அமெரிக்கப் பயணம் வெற்றிப் பயணம் – சாதனைப் பயணம்” என்று அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு நேற்று (14.9.2024) சென்னை திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:–

அனைவர்க்கும் வணக்கம்!

நீங்கள் எல்லாரும் நல்லா இருக்கிறீர்களா?

அமெரிக்க நாட்டிற்குச் சென்று அரசு முறைப் பயணத்தை நிறைவு செய்து சென்னை திரும்பி இருக்கிறேன். இது வெற்றிகரமான பயணமாகவும், இன்னும் சொல்லப்போனால் ஒரு சாதனைக்குரிய பயணமாகவும் அமைந்திருந்தது. தனிப்பட்ட எனக்கு அல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கான ஒரு சாதனைப் பயணமாக இந்தப் பயணம் அமைந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலக நாடுகளில் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய தொழில்களைத் துவங்குவதற்கு தொழில் முதலீடுகளைச் செய்ய வைப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக கடந்த 28.8.2024 அன்று

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்



சென்னை விமான நிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்த காட்சி. உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மற்றும் அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.